(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE **21 UTM 509**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2023**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**ஐந்தாம் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – 3**

## காப்பியங்கள்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலம் எது?
   அ) கி.பி 3-ஆம் நூற்றாண்டு ஆ) கி.பி 2-ஆம் நூற்றாண்டு
   இ) கி.பி 5-ஆம் நூற்றாண்டு ஈ) கி.பி 7-ஆம் நூற்றாண்டு
2. தண்டமிழ் ஆசான் என்று சிறப்பிக்கப்படுபவர் யார்?
   அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச் சாத்தனார்
   இ) சேரன் செங்குட்டுவன் ஈ) அறவண அடிகள்
3. சீவகனின் தந்தை பெயர்?
   அ) சச்சந்தன் ஆ) கட்டியங்காரன் இ) கந்துக்கடன் ஈ) நந்தட்டன்
4. சீறாப்புராணம் எத்தனை படலங்களைக் கொண்டது?
   அ) 92 ஆ) 96 இ) 88 ஈ) 53
5. காந்தன் என்பதன் பொருள்
   அ) தலைவன் ஆ)தலைவி இ)மணமகள் ஈ) மணமகன்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. சிலப்பதிகாரம் எவ்வாறு போற்றப்படுகிறது?
7. காயசண்டிகை யார்?
8. சீவகசிந்தாமணி எத்தனை இலம்பகங்களைக் கொண்டது?
9 கிட்கிந்தையின் மன்னன் யார்?
10. இந்திரனின் வாகனம் எது?

**(த.பி.பா.)**

*ETHICAL PAPER*

**பகுதி – ஆ ( 5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) மாதவி ஆடற்கலை அரங்கேற்றிய சிறப்பினை விளக்குக ?

**(அல்லது)**

ஆ) உவவனத்தின் சிறப்பினை எழுதுக ?

12. அ) ஏமாங்கதநாட்டு வளத்தைப் பற்றி விவரி ?

**(அல்லது)**

ஆ) உதய காலத்தில் பாண்டவர்களுக்கு தோன்றிய நல்நிமித்தங்கள் யாவை?

13. அ) சுக்கீரிவன் வாலியைப் போருக்கு அழைக்கும் நிகழ்வினை விளக்குக?

**(அல்லது)**

ஆ) பெருங்கதை நூல் அறிமுகம் விளக்கம்?

14. அ) சேக்கிழார் பற்றிக் குறிப்பு வரைக?

**(அல்லது)**

ஆ) துர்வாசர் மனமாற்றத்திற்குக் காரணம் என்ன?

15. அ) கடவுள் அவதரிக்க சூசை வேண்டிய காட்சியை விளக்குக?

**(அல்லது)**

ஆ) சீறாப்புராணம் குறிப்பு வரைக?

**பகுதி – இ (4 x 10 = 40 மதிப்பெண்கள்))**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும்.(K4 & K5)**

16. மங்கல வாழ்த்துக்காதை உணர்த்தும் செய்தியைத் தொகுத்துரைக்க?
17. சச்சந்தன் வரலாறு குறித்து விளக்குக?
18. அனுமனின் ஆற்றல் குறித்து வாலி இராமனுக்கு எடுத்துரைக்கும் பாங்கினை பற்றி விவரி?
19. இயற்பகை நாயனாரின் பக்திச்சிறப்பினை விளக்குக?
20. வெள்ளையானை சாபம் தீர்ந்த நிகழ்வினை எடுத்துரைக்க?
21. தேம்பாவணி திருமணப்படலத்தை சுருக்கி வரைக ?

************************